# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 123/2020 நாள்.09.10.2025**

PW2- திரு. செந்தில்குமார் , த/பெ. திரு. செல்வராஜ்

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம், மாட்டுவியாபாரம், குதிரை வியாபாரம் செய்து வருகிறேன். மாட்டு வியாபாரம் எப்படி என்றால் வாங்கி விற்பேன். எங்கு போய் வாங்குவேன் என்றால் கிராமங்களில் வாங்குவேன். முருகானந்தம் எப்படி தெரியும் என்றால் அவர் ரியல் எஸ்டேட் மற்றும் நெல் வியாபாரம் செய்துவருகிறார் என்னிடம் கறவை மாடு வாங்கினார் அதனால் தெரியும். எந்த ஆண்டு வாங்கினார் என்றால் அம்மாவின் 65 வது பிறந்தநாளுக்கு ஒரத்தநாட்டில் மாடு கொடுத்தார்கள் அதற்கு என்னிடம் மாடு வாங்கி போனார், குறிப்பாக எந்த ஆண்டு என்றால் அதை நான் ஞாபகம் வைத்து கொள்ளமுடியாது. என்னிடம் எத்தனை மாடு வாங்கினார் என்றால் 17 மாடு. 17 மாடுகள் விலை எவ்வளவு என்றால் ஒரு மாடு 30000 வீதம் கொடுத்தேன் மொத்தம் எவ்வளவு என்றால் நீங்களே கணக்கு பண்ணுங்கள் என்று சாட்சி சொல்லிவிட்டு பின்பு ரூ. 5,10,000 என்று சொல்கிறார். பணம் எப்படி கொடுத்தார் என்றால் ரொக்கமாக கொடுத்தார். முருகானந்தம் என்ன செய்கிறார் என்றால் இப்போதுதான் சொன்னேனே என்று சொல்லிவிட்டு ரியல் எஸ்டேட் என்று சொல்கிறார். எவ்வளவு வருடமாக செய்கிறார் என்றால் இன்றையிலிருந்து 15 ஆண்டுகள் இருக்கும். லேவுட் போடுவாரா என்றால் வாங்கி கொடுப்பார். பிரதிவாதி ஹக்கீம் எப்படி தெரியும் என்றால் அவருடைய தாயார் என்னிடம் கறவை மாடு வாங்கியுள்ளார். அது எந்த வருடம் என்றால் 15 வருடங்களுக்கு முன்பு. யார் மாடு வாங்க வந்தார்கள் என்றால் அந்த அம்மாவும் பிரதிவாதியின் தம்பியும் வந்தார்கள். எங்கு வந்தார்கள் என்றால் கீழ புனவாசல் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் நடக்கடை. நடுக்கடைக்கும், புனவாசலுக்கும் 20 கி.மீ இருக்கும் என்றால் இல்லை 7 கி.மீ. 1ஆம் பிரதிவாதி ஹக்கீம் வீட்டில் எப்போதும் 50 மாடு இருக்குமா என்றால் இருக்காது 2, 3 இருக்கும். எப்போது அவர்களிடம் மாடு வாங்கினேன் என்றால் அவர்களிடமிருந்த கறக்காத மாட்டைஇ வாங்கி கொண்டு

என்னிடமிருந்த மாட்டை அவர்களிடம் மாற்றி கொண்டேன். மாட்டு வியாபாரத்திற்கு நான் போனேனா அவர்கள் என் வீட்டிற்கு வந்தார்களா என்றால் அவர்கள் வந்தார்கள். மாட்டை மாற்றிய ஒரேநாளில் அவர்களை தெரியுமா என்றால் இல்லை என்னை பார்க்கும்போது பேசுவார்கள். ஹக்கீம் தாயார் என்னிடம் எப்போது பேசுவார் என்றால் நான் திருவையாறு போகும்போது அவர் அங்கு வரும்போது எப்போதாவது வரும்போது பேசுவார் எப்போதாவது என்பது எவ்வளவு நாள் என்றால் ஆறுமாதத்திற்குள் ஒருமுறை இருக்கும். மாட்டு வியாபாரம் ஒருமுறைதான் அவர்களிடம் செய்தேன் என்றால் ஆமாம். முருகானந்தம் எந்த ஊர் என்றால் நடுகாவேரி. இன்றைக்கு என்னை அழைத்து வந்தது முருகானந்தம் இல்லை நானாகதான் வந்தேன். முருகானந்தம் நீதிமன்றத்தில் உள்ளார் என்றால் ஆமாம். வாதிக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரய ஒப்பந்தம் வா.சா.ஆ.2 இல் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் ஆமாம். ஹக்கீம்க்கும் பாத்தியப்பட்ட 10/11 3711 சதுரடி இடத்தை விற்பனைக்கு வந்ததை முருகானந்தத்திற்கு நான்தான் சொன்னேன். எனக்கு யார் சொன்னது என்றால் ஹக்கீம்தான் சொன்னார். என்ன பத்திரம் பார்த்தேன் என்றால் செட்டில்மெண்ட் பத்திரம். யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் ஹக்கீம் முருகானந்தத்திற்கு எழுதி கொடுத்தார். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 8வது. அழைப்பாணையை படித்து பார்த்தேனா என்றால் என் மகன் படித்து சொன்னார். அதன் விபரத்தை சொன்னாரா என்றால் இல்லை சம்மன் வந்ததாகதான் சொன்னால். அழைப்பாணை வந்ததை முருகானந்தத்திடம் கேட்டேனா என்றால் நேராக நீதிமன்றம் வந்துவிட்டேன். நீதிமன்றம் வந்தபிறகு முருகானந்தம் இருந்தார் அவரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் அவர்களுக்கும் வழக்கு இருப்பதாக சொன்னார். நான் சாட்சி கையெழு்த்து போடவில்லையே என்னை ஏன் கூப்பிட்டீர்கள் என்று கேட்டேனா என்றால் பணம் கொடுக்கும்போது நான்இருந்தேன். Agreement தேதி என்ன என்றால் 16.11.2017. எப்படி தேதி சொல்கிறேன் என்றால் ஞாபகம் வைத்திருந்தேன். 2017 வது வருடம் தீபாவளி எந்த தேதியில் வந்தது என்றால் தெரியாது. முருகானந்தம் ஹக்கீம் அன்றைக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் 16ஆம் தேதி 10லட்சம் கொடுத்தார். செக்காக கொடுத்தாரா என்றால் இல்லை பணமாக கொடுத்தார். அவ்வாறு பணம் கொடுக்கும்போது வீட்டில்

கொடுத்தாரா வழக்கறிஞர் அலுவலகத்தில் கொடுத்தாரா என்றால் வக்கீல் முகிலன் அலுவலகத்தில் கொடுத்தார். அப்படி பணம் கொடுக்கும்போது நான், முருகானந்தம், ஹக்கீம் தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால் ஹக்கீம் அப்பா, அம்மா, தம்பி மற்றும் வக்கீல் ஆகியோர் இருந்தார்கள். அவ்வாறு பணம் கொடுக்கும்போது இரவு 8 மணி இருக்குமா என்றால் இல்லை மதியானம். பணம் கொடுக்கும்போது 1000ரூபாய் நோட்டு இருந்ததா என்றால் 500 ரூபாயாக கொடுத்தார். 500ரூபாய் எத்தனை கட்டுகள் என்றால் 20 கட்டுகள். எல்லாம் வங்கியில் இருந்து வாங்கி வந்த பண்டலா என்றால் ஆமாம். முருகானந்தம் என்னிடம் வங்கியிலிருந்து எடுத்து வருவதாக சொன்னாரா என்றால் இல்லை. அதன்பிறகு பணம் கொடுத்தாரா என்றால் அடுத்தநாள் 6 லட்சம் கொடுத்தார். 6லட்சம் எங்கு வைத்து கொடுத்தார் என்றால் ஹக்கீம் வீட்டில் வைத்து கொடுத்தார். அதற்கு வரச்சொல்லி என்னை யார் கூப்பிட்டார் என்றால் இரண்டுபேரும் கூப்பிட்டார்கள். அதன்பிறகு வேறு ஆவணம் எழுதி கொண்டாரா என்றால் 20ஆம் தேதி பவர் கொடுத்தார். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. நான் பதிவாளர் அலுவலகத்திற்கு போனேனா என்றால் வக்கீல் ராஜராஜசோழன் பத்திரம் எழுதி கொண்டுவந்தார். அதற்கு யார் விபரம் சொன்னது என்றால் ஹக்கீமும், முருகானந்தமும். நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். ஆவணம் யார் கையில் இருந்தது ஹக்கீம் வைத்திருந்தார். முருகானந்தம்தான் சொன்னாரா என்றால் இரண்டுபேரும்தான் சொன்னார்கள். தட்டச்சு செய்யும்போது நான் இல்லை என்றால் ஆமாம். நான் நேராக பதிவாளர் அலுவலகம்தான் சென்றேன் என்றால் ஆமாம். Agreement போட்டபிறகு ஏன் பவர் வாங்குகீறிர்கள் என்று கேட்டேனா என்றால் இடத்தை பொறுத்து பவரை கொடுத்துவிட்டார். அவரிடம் ஒப்படைத்துவிட்டார். அந்த இடத்தில் வீடு உள்ளதா என்றால் காலிமனையாக உள்ளது. அந்த இடம் ஹக்கீம் அனுபவத்தில் உள்ளதா என்றால் முருகானந்தம் அனுபவத்தில் உள்ளது. யார் வரி கட்டுகிறார் என்றால் தெரியாது. பவர் பத்திரத்தை படிக்க சொல்லி கேட்டேனா என்றால் இல்லை. பொது அதிகார ஆவணத்தில் என்ன எழுதபட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஹக்கீம் ஊர் முழுக்க பணம் கொடுத்து கொண்டிருக்கிறான் என்ற விபரத்தை அவர் தாயார் என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. முருகானந்தம் நிறைய பஞ்சாயம் பேசுவார் என்றால் தெரியாது. நான் தினமும் முருகானந்தத்தை

பார்ப்பேனா என்றால் இல்லை. கந்தர்வகோட்டை மொய்தீன் என்ற பாய் தெரியுமா என்றால் தெரியாது. நான் அவரிடம் பிளாட் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. ஹக்கீம் என்ன செய்கிறார் என்றால் சாமிநாதன் வழக்கறிஞரிடம் கார் ஓட்டி கொண்டிருந்தார். அங்குதான் முருகானந்தத்திற்கும் ஹக்கீமுக்கும் பழக்கம் என்றால் இல்லை. மொய்தீனிடம் கொடுத்த பணத்தை வசூல் செய்யதான் ஹக்கீம் முருகானந்தத்திடம் வந்தார் என்றால் தெரியாது. முருகானந்தம் என்பவர் பஞ்சாயத்து செய்வார் என்றும் அது எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. அதற்காகதான் ஹக்கீம் முருகானந்தத்திடம் வந்தார் என்றால் சரியல்ல. அதற்காகதான் ஹக்கீம் பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார் என்றும் அதை முருகானந்தம் இந்த வழக்கில் பயன்படுத்தி கொண்டார் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஒப்பந்தம் வெற்று பத்திரத்தில் தான் ஹக்கீம் கையெழுத்து போட்டு கொடுத்தார் என்றும் அந்த தாளில் முருகானந்தம் ஆவணமாக தயார் செய்து கொண்டார் என்றும் அதற்கு பணம் கொடுக்காததை கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. முருகானந்தத்திற்கு மூன்று நாளில் 21 லட்சம் பணம் கொடுக்க அருகதை இல்லை என்றும் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் தயார் செய்தது முகிலன் வழக்கறிஞர் என்றால் ஆமாம். அவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஒப்பந்த சொத்தின் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியாது. கிரய ஒப்பந்தப்படி முருகானந்தம் ஹக்கீமுக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும், முருகானந்தம் வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகானந்தத்திற்கு கொடுத்த பொது அதிகாரத்தை ரத்து செய்துவிட்டாரா இன்றும் அமலில் உள்ளதா என்றால் தெரியாது.

<u>2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.